**18.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸை தடுப்பதற்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு வசதிகளை வழங்குவதன் ஒரு பகுதியாகவும், நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், அசென்ட்யா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து கொரோனா வைரஸை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது.

மேலும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கைபேசி மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தினந்தோறும் குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படுகிறது. மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

மேற்கூறியவற்றைத் தவிர, அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள கழிப்பறைகளில் கை சுத்திகரிப்பான் வழங்கப்படுகின்றது. அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களும், மெட்ரோ இரயில்களும் அவ்வப்போது கிருமிநாசினி மூலம் முழுமையாக சுத்தம் செய்யப்படுகின்றன. மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள அனைத்து பாதுகாப்பு ஊழியர்களுக்கும் கையுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் இரயில் பெட்டிகளில் உள்ள கைப்பிடிகள் மற்றும் இருக்கைகள் குறிப்பிட்ட இடைவெளியில் அடிக்கடி சுத்தம் செய்யப்படுகின்றன. அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பயணிகள் மெட்ரோ இரயிலில் ஏறுவதற்கு முன்பு பயணிகளின் உடல் வெப்பநிலையை சரிபார்க்க வெப்பநிலை உணர்திறன் கருவி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் முகக்கவசம் வழங்கப்படுகின்றன.

மேலும் மத்திய, மாநில அரசுகள் மூலம் அவ்வப்போது அறிவுறுத்தப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.